சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு	ரூபாய்	2.
மற்றவர்களுக்கு	... ,,	3.
தனிப்பிரதி	... அணா	4.

விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை

TO LET.

உத்தம தோழன்.

மூத்திரசம்பந்தமான வியாதிகளால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுத்து பேரும் புகழும் பெற்ற உத்தம தோழன் யாதென்று உங்களுக்குத் தெரியுமா?

அதுவே எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளை சாஸ்தமாகக் கண்டிக்கும்.

[32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1]

இனம்! "போஜன விதி" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, சென்னை.

கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் II] 1931ஹூ நவம்பர் [இலக்கம் 2.

1930-31-ம் ஹூத்தில் நமது வர்த்தகம்.

"சூரிய வெப்பத்தில் நமக்குற்றவிடம்" என்ற தலையங்கத்தின் கீழ் நமது அன்னியநாட்டு வர்த்தகத்தின் அவசியத்தை நாம் எடுத்துக் காட்டினோம். நமது நிலைமையில் காணப்படும் இரண்டு முக்கிய அம்சங்களை அந்த வியாசங்களில் நாம் குறிப்பிட்டோம். நம் தேசம் அனேகமாக முக்கியமானதோர் விவசாய நாடென்றும், நமது எற்றுமதி வர்த்தகம்தான் நம் தேசம் ஸ்ரீ வித்து வாழ அவசியமாயிருக்கிறதென்றும் எடுத்துக் காட்டியிருந்தோம். 1930-31-ம் வருஷத்தில் நமது வர்த்தகம் எவ்வழியில் எம்மட்டில் நம்மை பாதித்திருக்கிறதென்பதை இந்த வியாசத்தில் எடுத்து விவரிப்போம். 1930-31-ம் வருஷத்தில் முந்திய வருஷத்தை விட (1929-30) இந்தியாவில் இறக்குமதியான சாமான்களின் மதிப்பு 5 கோடி 8 லட்ச ரூபாய் குறைவு. எற்றுமதி சாமான் மதிப்பு இன்னும் அதிகமாகக் குறைந்துபோயிருக்கிறது. இக்குறை ரூ. 90 கோடியே 32 லட்சம். இதை கணக்கெடுத்துப் பார்த்தால் அதற்கேற்ற அளவு சாமான்குறைவென்று தெரிந்துகொள்ளக்கூடும். இது சரியில்லை. கொஞ்சம் அளவு சாமான் குறைவென்பது உண்மையேயாயினும், மேற்கூறப்பட்ட புள்ளிவிவரத்திற்கேற்ப குறைவேற்பட்டிருப்பதாகாது. எற்றுமதி இறக்குமதித்தொகை குறைந்திருப்பதற்குக் காரணங்கள் பலவாகும். ஆனால், சாமான்களின் விலை அதிகம் இறங்கிப்போயிருப்பதே முக்கியகாரணம் என்பது எவருக்கும் தோன்றக்கூடிய விஷயம்.

1929 செப்டம்பரிலிருந்து 1931 மார்ச்சு மாதம் முடிய எற்றுமதியாயிருக்கும் சாமான் விவரங்களை கவனித்தால் விலை அதிகம் இறங்கியிருப்பதைக் காணலாம். சணல் 1929-ம் வருஷத்திலிருந்ததைவிட 1931-ல் விலை சரிபாதி இறங்கிவிட்டது. எண்ணெய் வித்துகளும் 100-க்கு 49 வீதம் விலை குறைந்துபோயிருக்கிறது. கோதுமை விலை 100-க்கு 47 வீதம் படுத்துப்போய்விட்டது. பருத்தியும் அரிசியும் முறையே 100-க்கு 36-ம் 35-ம் வீதமும் விலை குறைந்திருக்கிறது. இவை யாவும் அனேகமாக பாதி

கிட்டத்கட்ட விலை விருந்திருக்கிறது. அதாவது 1931-ம் வருஷத்தில் 1929-ம் வருஷத்தில் கிடைக்கவேண்டுமானல் குடியானவர்கள் முன்போல் இரட்டிப்புகடங்கு சாமான்களை விற்பனை செய்யவேண்டும்.

ஆனல் அதே மாதிரி ரயத்துக ளிஷ்டப்பட்ட சாமான்களை பாதி விலைக்கு வாங்க முடிந்திருக்கிறதா என்பதை ஒரு நிமிஷம் கவனிப்போம். நம் நாட்டிற்குத் தேவையான தயாரான சாமான்கள் வெளியூர்களி லிருந்தே வரவேண்டியிருக்கிறது. நம் நாட்டிலிறக்குமதியாகும் சாமான் களைக்கொண்டு விவசாயிகளுக் கவசியமான சாமான்களின்விலை நிர்ணயிக் கப்படுகிறது. பிரஸ்தாபத்திலிருந்து வருஷத்தில் ஏற்றுமதிக் கணக்கைக் கொண்டு பார்த்தால் பருத்தி நூல் சரக்குகளும், சர்க்கரையும் 100-க்கு 19 வீதம்தான் விலை குறைந்திருக்கிறது. உலோகங்கள் விலையும் 100-க்கு சரி யாக 15 வீதம்தான் குறைந்திருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டின் 1930-31-ம் வருஷத்திய வர்த்தக ரிபோர்ட்டில் இந்தியாவின் முக்கிய பொருள்கள் இறக்குமதியான சாமான்கள் விலை இறக்கத்தைவிட $2\frac{1}{2}$ மடங்கதிகம் வீழ்ந்துபோயிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து இந்திய ரயத்துகள் வாங்கும் சாமான்கள் 100-க்கு 16 வீதம் மாத்திரம் குறைந்திருக்கையில், விற்பனை செய்யும் தங்கள் சாமான் களுக்கு சகஜமாகக் கிடைத்த விலையில் பாதிகூடக்கிடைப்பது துர்லபமா யிருப்பது விளங்கும்.

உலகமெங்கும் பொருளாதாரச் சுணக்கம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப் படுகிறதை நாம் கவனித்து வருகிறோம். நம் நாட்டைப்போலுள்ள இதர தேசங்களுக்கு நேர்ந்துள்ள கதி என்னவென்பதை நாம் சற்றே கவனிப் போம். பிரஸ்தாப வருஷத்தில் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் விலையிறக்கம் சரா சரி 100-க்கு 22 வீதமாயிருந்திருக்கிறது. யுனைடட் ஸ்டேட்ஸில் விலை இறக்கம் 24%, கனடாவில் 23%; ஆஸ்திரேலியாவில் $24\frac{1}{2}$; ஜப்பானில் 27%; இந்தியாவில் 32%.

இந்தக்கணக்கிலிருந்து என்னதெரிகிறது? இதர தேசங்களுடன் ஒப் பிட்டுப் பார்க்குமிடத்து நம் தேசம்தான் அதிகமாக பாதிக்கப்பட்டிருக் கிறது. உலகத்தில் வேறெந்த தேசத்திலும் கால்வாசிக்குக்கீழ் விலை இறங்கவே இல்லை. இத்தேசத்தில் மூன்றிலொரு மடங்கு விலை குறைந்து போயிருக்கிறது; இத்தேசத்தில் விசாலமாகப் பயிரிடப்படும் முக்கியமாக ஜனங்களுக் குதவியாகவிருக்கும் இரண்டொரு சாமான்கள் விலை பாதியா கக் குறைந்துபோயிருக்கிறது. வங்காளிகள் பெரும்பாலும் சணலையே நம்பி வாழ்கிறார்கள். சென்னையிலுள்ள ஏழை விவசாயிகள் பெரும்பாலோ ரும் பம்பாயில் ஒரு பகுதியினரும் ஆதாரமாகக் கொண்டுள்ள பொருள்

எண்ணெய் வித்துக்கள். இவர்களுக்குத்தான் அதிக கஷ்டநஷ்டம் விளைந்திருக்கிறது. இவர்களனுபவம் சகிக்கக்கூடியதில்லை யென்பதில் சந்தேகமில்லை.

மில்களில் நெய்யப்படும் ஜவுளி சாமான் கணக்கு விவரங்களைக் கவனித்தால் இந்திய ரயத்துகள் சில இன்றியமையாத பொருள்கள் பலவில்லாமல் வாழ நேர்ந்திருப்பது விளங்கும். இந்திய மில்கள் அதிக திருப்திகரமாக வேலைசெய்திருக்கின்றன. 1928-29-ம் வருஷத்தில் இவைகள் நூற்றநூல் 189 கோடியே 30 லட்சம் கஜமாகும். 1930-31-ம் வருஷத்தில் இந்த மில்களில் விற்பனைக்குத் தயாரான நூல் 256 கோடி கஜமாகும். அதாவது மில்களில் 1930-31-ம் வருஷத்தில் முந்திய வருஷத்தைவிட 100-க்கு 35 வீதம் துணி உற்பத்தி யதிகப்பட்டிருக்கிறது. இங்கிலாந்திலிருந்து துணி நூல் இறக்குமதி 58%-ம் ஜப்பானிலிருந்து 43%-ம் குறைந்துபோயிருக்கின்றன. இந்த இரண்டு தேசங்களிலிருந்தும்தான் நம் நாட்டிற்கு அதிகமாக ஜவுளி இறக்குமதியாகி வந்திருக்கின்றன. இறக்குமதி மொத்தமாகவே ஏராளமாகக் குறைந்துபோயிருக்கிறது- இறக்குமதி 197 கோடி கஜமாயிருந்தது 87 கோடி கஜமாகக் குறைந்துபோய்விட்டது. இதன் பலனாக 1930-31-ம் வருஷத்தில் ஒவ்வொருவருமாக உபயோகித்து வந்துள்ள துணி அதிகமாகக் குறைந்துபோயிருக்கிறது. முறுக்கேறிய நூலும் விசேஷமாகக் குறைந்துவந்திருக்கிறது. 1928-29-ம் வருஷத்தில் ரூ. 639 லட்சமாக இருந்த இறக்குமதி மதிப்பு 1930-31-ம் வருஷத்தில் ரூ. 308 லட்சமாகக் குறைந்திருக்கிறது. ஆனால், இந்திய மில்கள் உற்பத்தி 648,298,000 ராத்தலிலிருந்து 867.045,000 ராத்தலாக உயர்ந்திருக்கிறது. அன்னிய நாட்டு அல்லது உள் நாட்டு மில் துணி இறக்குமதியும் உற்பத்தியும் எவ்வளவாயிருப்பினும் ரயத்துகள் வசமுள்ள துணி கொஞ்சமேனு மதிகப்படவில்லை. கதர் விசேஷமாக உபயோகத்திலிருந்து வரினும் இன்னும் நூற்றுக்கோடிக் கணக்கான கஜம் விற்பனைக்குத் தயாராயில்லை. ஆகையினால் மில்துணி எவ்வளவு கிடைக்கிறதென்பதைக்கொண்டு நமது ரயத்துகளுக்கவை ஏன் கிட்டாமற் போய்விட்டன என்பதைக் கணக்ட முடியும். இவ்விதக் கணக்கும் சுமார் மதிப்பே தவிர வேறில்லை. விவசாயிகள் வாஸ்தவமாக வாங்கும் சாமான் அளவைக்கொண்டு நாம் கணக்கிடவில்லை. விற்பனைக்குப் போந்துள்ள சாமான்களில் எவ்வளவை அவர்கள் வாங்குகிறார்கள் என்ற கணக்கைக்கொண்டே நிதானிக்கிறோம். வருஷக் கடைசியில் விற்பனையாகாது மீந்துபோயிருக்கும் சாமானைக் கணக்கெடுத்தால் மேற்சொல்லப்பட்ட அளவு தெரிந்துவிடும். இருந்தாலும் நாம் கவனித்துப் பார்ப்போம். 1913-14-ம் வருஷத்தில் ரயத்துகளின் உபயோகத்திற்கு தலைக்கு 13·29 கஜங்கள் தயாராயிருந்தன. 1929-30-ம் வருஷத்திலோ 12·04 கஜங்கள்தானகப்பட்டன. இந்த வருஷம் 9·49 கஜங்கள்தான்

கிடைத்தது. இந்த அளவு கணக்கு வருஷா வருஷம் மாறிக்கொண்டிருப்பது உண்மையே; எனினும், போன வருஷத்தைவிட இந்த வருஷம் கிராக்கி குறைந்திருப்பதிலிருந்து ரயத்துகள் துணிவிஷயமாக எவ்வளவு தூரம் தங்களுடைய தேவைகளை குறைத்துக்கொண்டு விட்டனர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதிலிருந்து மற்றோர் விஷயமும் புலப்படுகிறது. இந்நாட்டில் சாதாரணமான ஆண், பெண் ஒவ்வொருவரும் வருஷம் ஒன்றிற்கு சராசரி 9½ கஜம் துணிதான் உபயோகிக்கின்றனர் என்றேற்படுகிறது. மத்திய வகுப்பினரும் உயர் வகுப்பினரும் அதிகப்படியான அளவு துணி உபயோகிப்பதைக்கொண்டு நிதானிக்கப்புகின், சாதாரண ஆள்கள் உபயோகிக்கும் துணியளவு 6 கஜங்களாகிவிடும். அதாவது வருஷமுழுவதும் எல்லா உபயோகத்திற்கும் இவர்களிடம் 6 முழம் துணி இரண்டு தானிருக்கும். இதை மனதில் எண்ணும்தோறும் உணர்ச்சியுள்ள எவரும், நாம் ஏழை சகோதரர் நிலைமையைக்கண்டு மனம் பதராதிருக்கமுடியாது. மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் சன்னிதானத்திலும் மகாத்மா காந்திதாம் இந்தியாவில் அரும்பாடுழைத்து வறுமையிலாழ்ந்திருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களின் உண்மை பிரதிநிதியென்று சொல்லிக்கொண்டு அரை முண்டுடன் சென்றிருப்பதில் தப்பொன்றுமில்லை. இந்தியர்கள் பெரும்பாலோர் தங்கள் வறுமைக் கொடுமையினால் சரீரத்தை மூடிக்கொள்ள துணியில்லாமல் வெயில், மழை, பனி, காற்று யாவற்றினாலும் அவஸ்தைப்படுகிறார்கள் என்பதை காந்திஜி வற்புறுத்திக் காட்டுகிறார்.

இந்தக் கஷ்டத்தினின்றும் விமோஜனமே கிடையாதா? மகாத்மாஜி இருப்பதனால் நமக்கு வழி பிறக்கும் என்ற நம்பிக்கை இன்னும் கொஞ்சமிருக்கிறது. இறக்குமதித் துணி வாங்குவதை வலுவில் குறைத்துக்கொண்டிருப்பதும் ஒரு நல்லதென்றே தோன்றுகிறது. ஜனங்கள் தாமாகவே அன்னிய நாட்டுத் துணியை வாங்காமலிருந்திருக்கிறார்களென்றும் இதனால்தான் இறக்குமதி குறைந்திருக்கிறதென்பதும் ஆட்சேபிக்கக்கூடிய விஷயமில்லை. இந்நாட்டு வர்த்தக சம்பந்தமாக இந்தியா கவர்ன்மெண்டு வெளியிட்டுள்ள மதிப்புரையில் இது தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. "பருத்தி நெசவு சாமான்கள் இறக்குமதி குறைந்துபோயிருப்பதற்குக் காரணமாயுள்ள முக்கிய விஷயங்கள் இரண்டு. பகிஷ்காரக் கிளர்ச்சியும், உபயோகிப்பவர்களுடைய வாங்கும் சக்திக் குறைவுமே முக்கியமான இரண்டு காரணங்களாகும். இவ்விரண்டில் எது எம்மட்டில் இறக்குமதியைப் பாதித்திருக்கிறதென்று சரியாகக் கணக்கெடுக்கமுடியாது" என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. துணி இறக்குமதிக் குறைவிற்கு மேற்கூறப்பட்ட இரண்டு காரணங்களும் முக்கியமானதாகும் என்று அந்த ரிபோர்ட்டில் எழுதப்பட்டிருக்கிறது. பகிஷ்கார இயக்கம் பலன் தந்திருப்பதைக் குறித்து நாம் பரமானந்த மடையவில்லை. இருந்தாலும் தேசிய சுயநிர்ணய

த்தைநாடி நம்முடைய சுயமதிப்பை வற்புறுத்தச் செய்யப்பட்ட இவ்வேலை மிகவும் சரியென்பதே நமது அபிப்பிராயம் என்பதைப் பணிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இறக்குமதி எந்தக்கினுசு துணிகளில் குறைந்திருக்கிறதென்பதை ஆராய்ந்து பார்த்தால் ஏழை மகாஜனங்கள் இந்நாட்டு மகரிஷிகளின் சத்புத்திரர்கள் என்பதற்கேற்ப எவ்வளவு வைராக்கியமாகத் தங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டிருக்கின்றனர் என்பது விளங்கும். கவர்ன்மெண்டு ரிபோர்ட்டில் பின்வருமாறு கூறப்பட்டிருப்பதை கவனிக்கவும்" காரிக்கம் துணிகள் இறக்குமதிக் குறைவுதான் அதி ஆச்சரியமாக விருக்கிறது. சென்ற வருஷம் $92\frac{1}{2}$ கோடி கஜம் இறக்குமதியாயிருக்கையில் இவ்வருஷம் $36\frac{1}{2}$ கோடி கஜம்தான் இறக்குமதியாயிருக்கிறது. 100-க்கு 60 விதம் குறைவேற்பட்டிருக்கிறது. ஜனங்கள் தங்கள் நிலைமையை யுணர்ந்து 100-க்கு 60 விதம் தங்கள் தேவைகளை மனமறிந்து திட சித்தத்துடன் குறைத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை இது காட்டுகிறது. பணிவான வாழ்க்கையே உயர்வான எண்ணம் எண்ண வழியென்பதை யுணர்ந்து இதற்கேற்ற கட்டுப்பாடுடன் வாழ இவர்கள் முற்போந்திருக்கிறார்கள். சாமான்கள் தயாரிப்பதென்ற பெயரை வைத்துக்கொண்டு உபயோகமற்ற அற்பத் தகரச் சாமான்களை விற்பனைசெய்து ஜனங்களுடைய அபிலாஷைகளை அனாவசியமாகப் பெருக்குவது சரியான வாழ்க்கையாகாது என்பதை இந்நாட்டு ஜனங்கள் தங்கள் செய்கைமூலம் உணர்ந்திருக்கிறார்கள். மேல் நாட்டு அர்த்த சாஸ்திரிகள் இன்னும் அஞ்ஞானத்தில் உழண்டுவருகிறார்கள். கிராக்கிக்கேற்ப சாமான்கள் தயாராக வேண்டியதே சரியான ஏற்பாடு என்னும் எண்ணம் இன்னும் அவர்கள் மனதைவிட்டு அகலவில்லை. இந்த எண்ணத்திற்கேற்ப வியாபாரமாகாமல் தேங்கி நிற்கும் சாமான்களை விற்கவும், தொழிலபிவிருத்திக்கும் மார்க்கம் தேவைகளைப் பெருக்கி அவற்றைப் பூர்த்திசெய்ய முயல்வதேயாகும் என்கிறார்கள். சாமான்கள் அபேட்சிக்கிறவர்களுக்கு அவற்றை வாங்க வழி தேடிக் கொடுக்கவேண்டுமென்கிறார்கள். இது முற்றிலும் தப்பானவழி. மனிதருடைய பொழுதையும் சிரமத்தையும் வீணாக்கி உபயோகப்படாத சாமான்களைச் செய்வது சரியாகாது. முதல் ஏராளமாகப் போடப்பட்டுள்ள பெரிய தொழிற்சாலைகளில் தயாரானபோதிலும் விஷம் நிறைந்த சாராயமோ உதவாக்கரையான தகர சாமானோ உபயோகமற்றவைதான். இவற்றைச் செய்வதில் படும் பிரயாசை வீண்தான். பீரங்குகுண்டு முதலிய பெரிய ஆயுதங்கள் தயாரித்தும் அவற்றை ஒழுங்காக வைத்துக்கொள்வதிலும் செலவிடப்படும் மனித யத்தனங்கள் யாவும் பயன்படாக்காரியங்களேயாகும். உலகில் நல்லகாலம் பிறந்தால் இம் முயற்சிகள் ஒய்ந்துபோக வேண்டியதே. யுத்தகடன் ஈடுகள், தங்க நிலைமை, கடன்மதிப்பு செல்வாக்கு முதலிய விஷயங்களில் விசேஷ சிரத்தை செலுத்தும் தேசங்கள் இவ்விஷயமாக ஒன்றுசேர்ந்து வேலைசெய்யவேண்டியது அவசியமாகிறது.

நம்முன்காணப்படும் வர்த்தகப்புள்ளி விவரங்களுள்ள நிலைமையிலும், உலகத்திற்கே வருங்காலத்தில் சுயேச்சை வாய்ந்த இந்தியாவினல்தான் விமோசனமேற்படும் என்ற நம்பிக்கை மாருமலிருந்து வருகிறது. மனிதனுடைய "ஆசை (தேவை) களை அடக்கிக்கொள்வதே உலக சாந்தமுற்று வாழுவழியென்ற பெரிய பொருளாதார தத்துவத்தைப் போதித்தனுஷ்டிக்க வல்ல நாடு சுதந்திரமுற்ற இந்தியாதான் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது.

பத்திராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீமான் ஜே. குப்புசாமி சௌத்ரீ சமீபத்தில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களுக்குள்ளிருக்கும் சம்பந்தங்களை அவர் விரிவாகக் கவனித்து இரண்டே முடிவுதான் சாத்தியமென்று தெரிந்திருக்கிருர்.

உள்ள நிலைமை.

கிராமப் பஞ்சாயத்துகளை சட்டப் பூர்வமான ஸ்தாபனமாகச் செய்ய வேண்டுமென்பது ஒரு தீர்மானம். ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபன வேலையை கிராமப் பஞ்சாயத்து திருப்திகரமாகச் செய்யவேண்டுமானல் அந்த ஸ்தாபனத்திற்குள்ள எல்லா அதிகாரமும் பொறுப்பும் பஞ்சாயத்துகளுக் கிருக்கவேண்டுமென்பது மற்றொன்று. ஜில்லாக்களில் கிராம வேலை மேற்பார்வைகள் சட்டப்பூர்வமாக அமைக்கப்படும் ஸ்பெஷல் கமிட்டிகளிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்று அவர் யோசனை கூறுகிருர். இந்த யோசனைப் பிரகாரம் இதே அதிகாரத்தை வகிக்கும் இதர ஸ்தாபனங்களுக்கு இடமில்லை. இந்த பிரச்சினையை பூராவாகப் பரிசீலனை செய்து அவசியமானதை உடனே செய்யவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருவதை நமது வாசகர்கள் அறிவார்கள். அது பலிக்கும் காலம் நெருங்கிவிட்டதாகவே நாம் மதிக்கிருேம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் முனிசிபாலிடிகளின் இன்ஸ்பெக்டராகிய ஸ்ரீமான் என். கோபாலசாமி அய்யங்கார் கிராம அபிவிருத்திநிதியின் உத்தேசம் யாதென்பதை விளக்கி யிருப்பதை கவனிக்க விரும்புகிருேம்.

கிராம அபிவிருத்தி நிதி.

கிராம அபிவிருத்திநிதியிலிருக்கும் பணத்தை நீடித்த கால உபயோக வேலைக்கு முதலாகப் போடுவதே சரியென்றும் பஞ்சாயத்துகளுக்குத்தான் அதைச் செலவிட முதல் உரிமை பெற்றிருப்பதாகவும் அவர் அபிப்பிராயப்படுகிருர். கிராமப் பஞ்சாயத்தபிவிருத்தியைக் கருதியே இவ்விதம் செலவிடுவது உசிதமென்று அவர் சொல்லுவதுடன், பஞ்சாயத்தில்லாத கிராமங்கள் யாவும் பஞ்சாயத்து கிராமங்களாகச் செய்யப்படவேண்டுமென்றும் அவர் எண்ணுகிருர்.

வங்காளத்தில் கிராமப் புனருத்தாரண வேலை.

ஸ்ரீநிகேதனத்தில் நடைபெறும் விதம்.

கிராமப் புனருத்தாரண வேலை இந்தியாவில் பல பாகங்களில் சிற்சில உற்சாகம் வாய்ந்தவர்களால் அதிக சிரத்தையாக நடைபெற்று வருகிறது. இவ்வேலை ஒவ்வொரிடத்திலும் ஒவ்வோர் மாதிரி நடைபெறுகிறது. இந்த வேலை சம்பந்தமாகப் பலவித கஷ்டங்கள் அனுபவத்திலேற்படுகிறது. இக்கஷ்டங்களைக் தடுப்பதற்கு எத்தகைய பிரயாசைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவென்பதை பரஸ்பரம் விசாரித்துத் தெரிந்துகொண்டால் உபயோகமாயிருக்கும். இந்த நோக்கத்துடன் வங்காளத்தில் ஸ்ரீநிகேதன் என்னுமிடத்தில் நடந்துவரும் கிராமப் புனருத்தாரண வேலையைப்பற்றி ஜனுப் அமீர் அலி என்பவர் மோகா என்னும் பத்திரிகையில் எழுதியுள்ள பின் வரும் குறிப்புகள் இங்கு எடுத்து பிரசுரிக்கப்படுகின்றன.

ஸ்ரீநிகேதன் என்பது கவி ரவீந்தரனுத்தாகூரினல் நடத்தப்படும் சாந்திநிகேதனத்தைச் சேர்ந்தது. இது விசுவபாரதி யென்று வழங்கும் சர்வதேச சர்வகலா சங்கத்தின் ஒரு பகுதியாகும். வங்காள மாகாணத்தின் மேற்கு பாகத்தில் விசாலமும் சுகமான பிரதேசம். மலேரியாவென்னும் விஷ ஜுரம் இங்கு அதிகம் கிடையாது. விவசாயத்திற்குச் சரியான பூமியென்று இதைக் கூறமுடியாது. ஜனங்களும் பரம ஏழைகள்; பிற்போக்கானவர்கள்; இங்கு வசிக்கும் ஜனங்கள் பெரும்பாலும் ஸந்தால் என்னும் மலை வாசிகள். இவர்கள் சேர்ந்து வசிப்பவர்களில்லை துணுக்குத் துணுக்காகப் பிரிந்து ஆங்காங்கு கிராமங்களில் வாசம் செய்பவர்கள். முகம்மதியர் தொகை இங்கு குறைவே.

ரவீந்தரனுத்தாகூரின் கவிப்பிரசித்தியினல் அவர் செய்துவரும் கிராமப்புனருத்தாரண ஏற்பாடுகள் அவ்வளவு பிரபலமாக வெளிவரவில்லை. ஆனல் தகூர் அவர்கள் பால்யமுதற்கொண்டு இவ்வேலையையே தம்முடைய முக்கிய முதல் கடமையாகக் கருதி உழைத்து வருகிறார். இந்த வேலையில் இவருக்கேற்பட்டுள்ள அபிமான மிகுதியினல் இதர சேவையை கவனிக்கப்போதிய சாவகாசமகப்படாமல் தேசாபிமானம் குன்றியவர் என்ற அபச்சொல்லிற்கும் பாத்திரராக நேர்ந்திருக்கிறது. அவர் எழுதியுள்ள கவிகளைக் கவனித்தால் தம் தேசத்திலுள்ள ஏழை மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதை தம்முடைய மதக்கடமையாக இவர் கொண்டிருப்பது விளங்கும். இந்தக்கடமையை பூர்த்தி செய்யும் அவாவுடன் இவர் 1910-ம் வருஷம் சாந்தி நிகேதனத்துக்கருகில் உள்ள காலஞ்சென்ற லார்டு வின்ஹாவின் முன்னேர் சென்ற நூற்றாண்டில் அனுபவித்துவந்த நிலங்கள் சில வற்றை விலைக்கு விலங்கினர். இந்த நிலத்தை கிராமப்புனருத்தாரண வேலைக்காதாரமான ஸ்தலமாகச்செய்ய இவர். இவருடைய புத்திரர் ரவீந்தரனுத்தாகூர், (விவசாயகமிஷன் மெம்பராயிருந்த) ஸ்ரீமான் நாகேந்திரனுதகங்கூலி ஆகிய மூவரும் பாடுபட்டனர். 192[illegible]-ம் வருஷம் எல். கே. எல்ம்ஹர்ஸ்ட் என்னும் ஒருவாலிப ஆங்கிலேயர் இந்த இடத்திற்கு வந்தார். இவருக்கு விவாகத்தினல் ஏராளமான சொத்து கிடைத்தது. இந்த சொத்து யாவற்றையும் உபயோகித்து இவரும் இவ

ருடைய மனைவியுமாக இந்த வேலையை நன்றாக நடத்த சென்ற 10 வருஷங்களாக சிரமப்பட்டு வருகிறார்கள்.

பத்து வருஷங்களுக்கு முன்னரே விவசாய அபிவிருத்திக்காக இயந்திரங்கள் முதலிய மேல்நாட்டு முறைகளை யனுஷ்டிக்கவேண்டிய தவசியமென்றுணரப்பட்டு அதற்கேற்ற சாமான்களும் ஆயுதங்களும் வாங்கி உபயோகப்படுத்தப்பட்டன. இந்த புதிய ஊக்கத்தில் ஒரு டஜன் மாணாக்கர்கள் வரை கலந்துகொண்டு விசேஷ சிரத்தை காட்டலானார்கள் ஆனால் மிஸ்டர் எல்ம்ளர்ஸ்ட், விவசாய அபிவிருத்தி மாத்திரம் கிராம முன்னேற்றத்தை ஏற்படுத்தாது என்பதை யுணர்ந்தார். அவருடைய முயற்சியினால் கிராமபுனருத்தாரணவேலை திட்டம் பலதுறைகளாக தயாரிக்கப்பட்டது. இந்தப்பிரதேசவாசிகள் மூன்றுவித அசௌகரியங்களினால் அவஸ்தைப்படுவதை மிஸ்டர் எல்ம்ளர்ஸ்ட் தெரிந்துகொண்டனர். "மலேரியா நோய் குரங்குகள் உபத்திரவம், ஜனங்களுடைய பரஸ்பர அவநம்பிக்கை" ஆகிய இந்த மூன்றுமே அத்தீமைகளென்றுணர்ந்து இவற்றைப் பரிகரிக்க ஒரு சாரணர்படையைத் திரட்டப்பட்டது. இவர்களுக்குத்தேவையான வழியில் பயிற்சியும் போதனையுமளிக்கப்பட்டன. மாடு சம்ரக்ஷணை செய்து பால் வெண்ணெய் தயாரித்தல், கோழி வளர்த்தல், நெசவுத்தொழில், பதனிடும் தொழில், ஓடு சூளை வைத்தல், கருமான் பட்டறை நடத்துவது, தச்சுத்தொழில், இயந்திரப் பயிற்சிசாலைத்தொழில் முதலிய பலவித போதனைகளும் அளிக்கப்படுகின்றன. இங்கு பயின்றவர்கள் கிராமங்களுக்குப் புத்திசாலிகளாகத் திரும்பிச்சென்று தங்கள் ஜீவனத்தையும் தேடிக்கொண்டு கிராம அபிவிருத்திக்கான வழியில் பாடுபடவும் கற்பிக்கப்படுகின்றனர்.

இப்போதனசாலையில், கிராமங்களில் சென்று வேலைசெய்யப் பிரத்தியக்ஷமாகப் பழக்குவதே முக்கியமாகக் கவனிக்கக்கூடிய விஷயம். சில மாணாக்கர்கள் சுற்றுவட்ட கிராமங்களில் தினசரி வேலைசெய்ய அனுப்பப்படுகின்றனர். இவர்கள் சுகாதார சங்கங்களை ஸ்தாபித்து, மலேரியாவைப்போக்க கொய்னா வினியோகித்து உபயோகமற்ற குளங்களை தூர்த்தவும், உபயோகப்படும் குளங்களில் குப்பை சேறை வாரியும், இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி பூதக்கண்ணாடி படங்கள் மூலம் ஞானம் புகட்டியும் வருகிறார்கள். பஞ்சகாலத்தில் சகாயம் செய்தும், உற்சவ காலங்களில் சுத்த ஜலம் சப்ளைசெய்து தொத்துநோய் பரவாது சுகாதாரவேலை செய்கிறார்கள். இத்துடன் நில்லாமல் கிராமவாசிகளின் நிலைமை கஷ்டங்கள் சமூக அமைப்பு யாவற்றையும் ஆழ்ந்தறிந்துகொண்டு நன்மைக்கு வழி தேடுகிறார்கள். இவ்வித அனுபவங்களைக்கொண்டு சரியான ஞானமேற்பட வழி ஏற்படுகிறது.

இதிலிருந்து கிராமபுனருத்தாரண வேலை மூன்றுவிதமாக நடைபெறுவது விளங்கும். கைத்தொழில் ஒன்று, கிராமவேலை மூன்று. இந்தப்பள்ளிக்கூடங்களுக்குப் பலவித மாணாக்கர்கள் போதனைக்குவருகிறபடியால், ஒவ்வொருவருடைய சாமர்த்தியத்திற்குமேற்றவாறு பயிற்சியளிக்கப்படுகிறது. கிராமப்புனருத்தாரண வேலை சம்பந்தமாக எவர் யோசனை கேட்டாலும் இவர்களுடைய அனுபவத்திற்கேற்ற புத்திமதி தவறாது அளிக்கப்படுகிறது.

பஞ்சாயத்துகளின் தற்கால நிலைமை.

(ஸ்ரீமான் ஜே. குப்புசாமி சௌத்ரீ.)

ஆந்திர தேசத்தில் சமீபத்தில் கூடிய ஸ்தல ஸ்தாபன முனிசிபல் மகாநாட்டின் உபசரணைத் தலைவராகிய ஸ்ரீமான் கே. சௌத்ரியின் பிரசங்கத்திலிருந்து பின் வரும் பாகம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்தின் தற்கால நிலைமை பின் வருமாறெனலாம். ஒரு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கு ஜில்லா போர்டு இருக்கிறது. அநேக தாலுக்கா போர்டுகளிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துகளு மிருக்கின்றன. இவைகள் செய்து வரும் வேலைகள் பல ஒன்றோடொன்று மோதுகின்றன. அதாவது ஒரே வேலையை இவை யாவும் செய்ய நேருகிறபடியால் இரட்டிப்பு வேலையாகிறது. ஜில்லா போர்டுகள் ரோடுகளைக் கவனிக்கின்றன. கல்வி, வண்டிப் போக்குவரத்து சாதனங்கள், சுகாதாரம், இதர மராமத்து வேலைகள் யாவும் ஜில்லா போர்டின் பொறுப்பாயிருக்கின்றன. யூனியன் போர்டு, கிராமப் பஞ்சாயத்துகளில்லாத விடங்களில் தாலுக்கா போர்டுகள் இந்த வேலையை கவனிக்கவேண்டியிருக்கிறது. தவிர ஒவ்வொரு ஜில்லாவிலும் கல்வி விஷயங்களைக் கவனித்துக்கொள்ள ஜில்லா கல்வி சங்கங்களுமிருக்கின்றன. இவ்விதமாக ஒரு சமாரத்தைப்பற்றிய பொறுப்பை பலரிடம் விடுவதனால் இவை யாவும் ஒன்றோடொன்றுஉராய்ந்து வேலை திறமையாக நடை பெறாமல் கெட்டுப்போக இடமேற்பட்டு விடுகிறது. ஆகையினால் இவ்வித விபரீதப் போக்கைத் தடுக்க நாம் யாவரும் முயற்சிக்கவேண்டிய அவசியமாகிறது.

முதலாவதாக கிராமங்களில் பஞ்சாயத்துகளவசிய மிருக்கவேண்டுமென்று சட்டமொன்றியற்றப்படவேண்டும். இவ்விதம் ஏற்பட்டால் கிராமப் பஞ்சாயத்துகள் செய்யவேண்டிய வேலை யென்னவென்ற கேள்வி பிறக்கிறது. ஸ்தல சுய ஆட்சியின் உருபாகிய கிராமப் பஞ்சாயத்து திறமையாக நடை பெற வேண்டியிருப்பின், ஸ்தல ஸ்தாபனத்திற்குள்ள அந்த கிராம சம்பந்தமான சகல பொறுப்பும் இதனிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஸ்தல ஸ்தாபன அதிகார பிரிவினை விஷயத்தை ஆராய நியமிக்கப்பட்ட ராயல் கமிஷனும், இந்தியா கவர்ன்மெண்டும் இதைப்பற்றி இதே விதமான அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் தற்சமய மிருந்துவரும் ஏற்பாட்டில் கிராமப் பஞ்சாயத்தின் அதிகாரம் தாலுக்கா போர்டுகளிடம் ஒரு பகுதியும், ஜில்லா போர்டினிடம் வேறு சில பகுதியுமிருந்து வருகிறது. இவ்வித இரட்டை ஆட்சியினால் உபயோகமான காரியம் எதுவும் திருப்திகரமாக நடைபெறுகிறதில்லை. ஆனால், ஜில்லாவின் கல்வி, சுகாதாரம், ரோடுகள், போக்குவரத்து சாதன ஏற்பாடுகள் யாவற்றையும் தனித்தனி கமிட்டி அல்லது ஸ்தாபனங்களமைத்து சம அதிகாரத்துடன் வேலை செய்ய ஏற்பாடு செய்வதே சரியான யோசனையாகத் தோன்றுகிறது. கல்வி சம்பந்தப்பட்டவரையில் கிராமப் பஞ்சாயத்து வேலையை கவனிக்க அந்த ஜில்லாவில் ஒரே ஒரு ஸ்தாபனம் தானிருக்கவேண்டும். இத்தகைய ஸ்தாபனத்திற்கு ஜில்லா கல்வி சபை அல்லது கமிட்டியென்று பெயர் வைக்கலாம். இது சட்டப்பூர்வமாக அமையவேண்டும். அந்தந்த ஜில்லாவின் உயர்தரக் கல்வியையும் இதே சபையிடம் விட்டுவிடலாம். ஜில்லா ரோடு கமிட்டியென்று மற்றோர் சபையை அமைத்து ஜில்லா முழுவதுமுள்ள ரோடு அபிவிருத்தி போக்குவரத்து சாதனங்களைக் கவனிக்கும் பொறுப்பு இதனிடம் விடவேண்டும. கிராம ரஸ்தாக்கள் விஷயமாக கிராமப் பஞ்சாயத்துகளுடன் இவை ஒத்து வேலை செய்யவேண்டும். சுகாசாரம் வைத்தியத்திற்காக வேறோர் கமிட்டியிருக்கவேண்டும். இக்கமிட்டி ஜில்லா முழுவதும் வைத்திய சுகாதார ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டு கிராமப்பஞ்சாயத்துகளுடன் சேர்ந்து அவ்வேலையைப் பூர்த்தி செய்து வைக்கவேண்டும்.

கிராம அபிவிருத்தி நிதி.

(ஸ்ரீமான் என். கோபாலசாமி அய்யங்கார் பிரசங்கம்)

ஆந்திரதேசத்தில் கூடிய ஸ்தலஸ்தாபன மகாநாட்டில் ஸ்ரீமான் என். கோபால சாமி அய்யங்கார் செய்த பிரசங்கம் :—

ஸ்ரீமான் அய்யங்கார் பின் வருமாறு பேசினுர். நிலத்திலிருந்து வசூலிக்கப்படும் ஸெஸ் வரியில் 18 பைகளில் 3 பை வீதம் கிராம அபிவிருத்தி நிதியில் தவறு து செலுத்திவிடப்படவேண்டும். இந்த நிதியை ஜில்லாபோர்டோ தாலுக்காபோர்டோ தொடவே கூடாது. தற்போது அமுலிலிருக்கும் சட்டப்பிரகாரம் இத்தொகையைத் தங்களிடம்தான் கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்த பஞ்சாயத்துகளுக்கு அதிகாரமென்பதில்லை. இந்நிதியிலிருக்கும் பணத்தை உபயோகப்படுத்து முன் அதை எந்த இனங்களுக்கு எவ்வழியில் செலவிடுவதென்ற ஒரு கொள்கையை யனுசரித்து விதிகள் தயாரிக்கவேண்டும். இந்தக் கொள்கை என்னவென்பது சட்டத்தில் விரிவபடுத்தப்பட்டிருக்கிறது. கிராம அபிவிருத்தி நிதியென்று இதற்குப்பெயர். இந்த நிதியில் அரை லட்சத்திலிருந்து ஒன்றரை லட்சம் ரூபாய்வரையில் சேரக் கூடும். இவ்வளவு பெரிய தொகையை ஒன்ருகச் சேர்த்துவைத்து அதிலிருந்து அதிகச்செலவுபிடிக்கும் நல்ல அபிவிருத்தி வேலையை நடத்தப் போதுமான அளவோ அல்லது சாத்யமான அளவோ பணம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அபிவிருத்தி என்ருல் அழியாத வேலைக்குச் செலவிடும் முதலாகும். சீர்திருத்த மராமத்துவேலை அபிவிருத்தியாகாது. இந்த நிதியிலிருந்து சில விளக்குகள் போடுவது சப்பாத்திக்காட்டை யழிப்பது, காவற்காரன் சம்பளம் கொடுப்பது போன்ற இத்தகைய தாத்காலிகச் செலவு செய்யப் பணம் அனுமதிப்பது சட்டத்தின் நோக்கத்திற்கு விரோதமாகும்.

கிராம அபிவிருத்தி நிதியில் சேரும் பணத்தை பஞ்சாயத்து கிராமத்திற்கு மாத்திரம் செலவிடுவது சட்ட விரோதமானதென்று சிலர் சொன்னுர்கள். இந்த நிதியை ஏற்படுத்துகையில் சட்ட சபையோர் கிராமப்பஞ்சாயத்தையும் ஸ்தல ஸ்தாபன அந்த சட்டமூலமே ஏற்படுத்தியிருக்கின்றனர் என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும். இதைக் கவனித்தால் இந்த நிதியைக்கொண்டுசெய்யப்படும் அபிவிருத்தி வேலை, யாதேனும் ஒரு பஞ்சாயத்தினுல்தான் நடைபெற வேண்டுமென்பதை தெரிந்துகொள்ளலாம். பஞ்சாயத்துகளை ஏற்படுத்த உத்தேசித்தவர்கள் கிராம அபிவிருத்தி நிதியை அதிகப்பஞ்சாயத்துகளை ஏற்படுத்தவும், அவற்றின் வேலை நன்கு நடைபெறவும், பஞ்சாயத்து எல்லைக்குள் சௌகரியங்கள் செய்துகொடுக்கவும் உபயோகிக்கக்கூடுமென்று இவ்வாறு செய்திருப்பதாக உணரவேண்டும். இந்த அபிப்பிராயத்தைத் தழுவினின்ருல் பஞ்சாயத்து கிராமங்களுக்குத்தான் இந்த நிதியை செலவிடும் முதல்பாத்யமுண்டு என்று ஒப்புக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்தில்லாத கிராமங்களும் கூடிய சீக்கிரத்தில் ஒரு பஞ்சாயத்து கிராமமாக வேண்டுமென்ற நம்பிக்கை அவர்களுக்குள்ளவரையில் இம்மாகாணத்தில் எல்லாவிடங்களிலும் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி அவற்றை சம்ரக்ஷிக்க இந்நிதி அவசியம் உபயோகப்பட்டே தீரவேண்டும்.

பஞ்சாயத்தில்லாத கிராமங்களில் ஜன நன்மைக்கவசியமான ஒருவேலை நடப்பதாயிருந்தால் அந்த இடத்திலுள்ளவர்கள் தாமாக தருமமாகப் பணம் கொடுப்பதைக்கொண்டு அதைச் செய்துமுடிக்கவேண்டும். பஞ்சாயத்து கிராமங்களோ சட்ட பூர்வமாக அமைக்கப்பட்டுள்ளன. ஜனங்கள் பொதுநலத்திற்காகப் பணம் கொடுக்க ஒப்புக்கொண்டால் பஞ்சாயத்தார் அப்பணத்தை அந்தக் கிராமத்திலிருந்து வரியாக வசூலிக்கக்கூடும்.

கிராம அபிவிருத்தி நிதியை சரியாகச் செலவிடும் வழி சாசுவதமாக பல தலைமுறைகளுக்கும் உபயோகப்படக்கூடிய வேலைகளில் அதைச்செலவிடுவதே யாகும். இந்த நிதியில் பஞ்சாயத்துகளுக்கே முதல் பாத்யமுண்டு.

இந்தியா வறுமையுற்றிருப்பதேன் ?

(" கலக இந்தியா " வில் மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு எழுதுவது)

சர்க்காரின் புள்ளிவிவர டைரக்டராகிய மிஸ்டர் பிண்ட்லேஷாஸ் 1911-ம் வருஷத்தில் இந்தியர் ஒவ்வொருவரின் சராசரி வருமானம் வருஷம் ஒன்றுக்கு 66 ஷிலிங் 8 பென்ஸ் அதாவது தினசரி சுவு 2 பென்ஸாகிறதென்று கணக்கெடுத்து சரியென்று மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்தியாவின் சீதோஷ்ணஸ்திதியின் சுபாவத்தினால் வீட்டிலும் உடுக்கும் உடையிலும் அதிகப்பணம் செலவிடவேண்டிய அவசியமேற்படவில்லை. இந்தியருடைய உணவுக் கிரயமும் மிகக் குறைவாயிருக்கிறது. "இருந்த போதிலும்" என்று மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு மேலும் எழுதுவதாவது: "இத்தேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பிரயாணி பட்டினியால் வாடி வளர்த்திக் கட்டையிட்டுள்ள சரீரங்களையும் பாழடைந்து காலியாகவும் இடிந்துவிழுந்துமுள்ள வீடு குடிசைகளையும், நூல் நூலாகப் பிரிந்து தொங்கலாடும் கந்தல்களையும், அசிரத்தையாக விடப்பட்டுள்ள புழுதி படிந்திருக்கும் கிராம ரஸ்தாக்களையும் கவனிக்கும்தோறும் இந்தியர்கள் இவ்விதம் சுகாதாரமோ, சௌக்கியமோ, சீரோ இல்லாம லவஸ்தைப்படக் காரணம் அவர்களுடைய வருமானம் அதி அற்ப சொல்பமாயிருப்பதேயாகும் என்பதை புணராதிருக்க முடியாது." இந்தியருடைய வேலையின் சக்தி எவ்வளவென்பதையே மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு முக்கியமாக ஆராய்ந்திருக்கிறார். இந்திய ஜனங்களில் சுமார் 100-க்கு 73 பேர்கள் விவசாயத்திலீடுபட்டுழைக்கிறார்கள். கைத்தொழில் செய்பவர்கள் கணக்கு 100-க்கு 10.5 ஆகிறது. ஸ்திரீகளால் ஏற்படும் பொருள் உற்பத்தி ஒரு பொருட்டாக மதிக்கக்கூடியதாகவில்லை. கீழ் ஜாதியினர் நாட்டுப்புறங்களில் வயலில் வேலை செய்கிறார்கள்; நகரங்களில் முரட்டு வேலைகள் இவர்களால் செய்யப்படுகின்றன. இவர்கள் வர்த்தகத்திலோ, உத்தியோகங்களிலோ புகுவதற்கு இன்னும் ஆரம்பிக்கவில்லை.

வேலை செய்பவர்களுடைய பலமோ, திறமையோ, நீடித்து வேலையும் சக்தியோ மேல்நாட்டு மதிப்பைக்கொண்டு நிதானித்தால் மிகவும் குறைவாயிருப்பது தோன்றும். இந்தியருடைய சராசரி ஆயுள்காலம் 23.5 வருஷங்கள்; பிரிட்டிஷ் வயது 58 வருஷங்கள். வேலைசெய்யும் தொழிலாளிகளுடைய சரீரதிடமும் பூர்த்தியாகவிருப்பதில்லை. வைத்திய ஆராய்ச்சிக்காரர்களுடைய மகாநாட்டின் முடிவிலிருந்து தொழிற்சாலையில் வேலைசெய்பவர்கள் வைத்திய வசதிகளில்லாமல் வருஷா வருஷம் தங்கள் ஜீவதசையில் இரண்டு அல்லது மூன்றுவரை விகிதம் ஆயுள் குறையும் ஸ்திதியில் இருக்கிறார்கள். போஷணைக்குறைவு கவனிக்கப்படாததனாலும், வியாதிகள் காலாகாலத்தில் கவனிக்கப்படாததனாலும் வேலைத்திறமை 100-க்கு 20 விகிதம் குறைந்துபோகிறது.

இந்த வியாதியை போஷணைக்குறைவையும் சரியானகாலத்தில் கவனித்து சரியான பரிகாரம் தேடாததனாலும் ஸ்திரீகளுக்கு பிரசவகால சௌகரியமளிக்கப்படாததனாலு மாத்திரம் இந்தியரில் சரிபாதி வேலைசெய்ய முடியாமற்போகிறதென்று மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு கணக்கிட்டிருக்கிறார்.

புராதன சாகுபடி முறை.

விவசாய சாகுபடி பண்டையகால முறையில் நடத்தப்பட்டு வரும் விஷயம் மற்றொன்று. இங்கிலாந்தில் ஒரு ஏக்ரா நிலத்தில் விளையும் கோதுமை யளவில் சரிபாதிதான் அதேயளவு பூமியில் இந்தியாவில் கண்டுமுதலாகிறது. பருத்தி அமெரிக்கா விளைவளவில் பாதி; கரும்பு கியூபாவில் சகஜமான விளைவில் சரிபாதி தான் இந்தியாவில் விளைகின்றன. ஹிந்து குடும்பங்களில் பரம்பரையாக நிலம் எல்லாப்பிள்ளைகளுக்குள்ளும் பாகமாகின்றமையால் தற்கால விவசாயமுறைகளை (கூட்டுறவில்லாமல்) லாபகரமாக அனுஷ்டிப்பது சாத்யமாவதில்லை. மாட்டுச் சாணியை வரட்டியாகத்தட்டி அடுப்பெரித்துவிடுவதனால் நிலத்திற்கு எருவில்லா மல் வரட்சையுண்டாகிறது. ஹிந்துக்கள் மலத்தை ஆபாசமென்று வெறுக்கின்ற மையால் (சீனர்கள் செய்வதைப்போல்) அதை எருவாக உபயோகிப்பதுமில்லை; பசுவை ஹிந்துக்கள் தெய்வமாகக் கொண்டாடுவதனால் இவற்றை கிரமமான வழி யில் சம்ரக்ஷித்து சரியான மந்தையாக வளர்க்கமுடிவதுமில்லை ஜீவனைக்கொல்வது மகத்தான பாவமென்று கூறி கிழட்டுமாடுகளும் பட்டினி கிடக்கும் மாடுகளும் நிறைந்துபோய் மாடுகள் வளர்த்திக் கட்டுடையிட்டு வேலைக்குப் போகப்படக்கூடிய திராணியற்று வருகின்றன. ஜீவகாருண்ய சிந்தையினால் குரங்குகளும் எலிகளும் கூட அதிகரித்து அனர்த்தம் விளைகின்றன. வயது முதிர்ந்து வேலைக்குபயோக மற்ற ஆடுமாடுகளை சம்ரக்ஷிப்பதில் மாத்திரம் இந்தியாவில் வசூலாகும் நிலவருமா னத்தொகையில் கால்பாக அளவு தொகை செலவாகிறதென்று ஏற்படுகிறது. எலி களைக் கொல்லாமல் விடுவதனால் ஏற்படும் சேதம் இந்திய ராணுவச் செலவிற்குப யோகப்படும் தொகைக்கதிகமாயிருக்கிறது.

இந்திய சௌகார்களும், நிலச்சுவான்தார்களும் கொள்ளைகொள்ளும் அம்சம் ஒன்றிருக்கிறது. விவசாயிகள் வாங்கியுள்ள கடன்தொகை 40 கோடியிலிருந்து 50 கோடி பவுன் வரையிலிருக்குமென்றும், இதற்கு வருஷா வருஷம் செலுத்தப் படும் வட்டி குறைந்தபக்ஷம் 10 கோடி பவுனாகுமென்றும், கணக்கிடப்படுகிறது. இதைத்தவிர நில சொந்தக்காரருக்கோ, ஜமீன்தாருக்கோ செலுத்தவேண்டிய கப்பம் வேறிருக்கிறது. வங்காளத்தில் இத்தொகை கவர்ன்மெண்டிற்குச் சேர வேண்டிய நிலவரிப்பணத்தில் மூன்று மடங்கென்று தெரிகிறது; பஞ்சாபில் இத் தொகை குடியானவர்கள் அடையும் சுசர் வருமானத்தைப்போல் மூன்று மடங்கு அதிகம். இவைபோக மத்தியிலுள்ளவர்கள் சாப்பிடும்தொகை ஒருபக்கமிருக்கிறது.

பொருள் வடிகால்.

இந்தியாவில் நிலச் சுவான்தரர்களின் நிலைமை இவ்வண்ணம் அமைந்திருப்ப தற்கு பிரிட்டிஷார் எம்மட்டில் காரணமா யிருந்திருக்கிறார்கள் என்பதை மிஸ்டர் பிரெயில்ஸ்போர்டு மழுப்பவில்லை. பிரிட்டனால் இந்தியாவின் பொருள் எவ்வளவு வெளிநாடுகளுக்கு வடிந்துபோகிறதென்பதையும் அவர் எடுத்தக் கூறாமலில்லை. பிரதி வருஷமும் இந்தியாவிலிருந்து 70 கோடி பவுன் வெளியே போய்விடுகிற தென்பதையும், பொதுஜன வருமானத்தில் 100-க்கு 83 பாகம் இராணுவச்செல விற்காக உபயோகிக்கப்படுகிறதென்பதையும் அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆனால் அன்னிய ஆட்சியை அகற்றிவிட்டால் மாத்திரம் இந்திய மக்களின் வறு மையைப் போக்கிவிடாதென்றும் அவர் கூறுகிறார். நாட்டின் மூடப் பழக்க வழக் கங்களை அறவே ஒழித்து இந்திய நிலச்சுதந்தர உரிமையை மாற்றியமைக்கப் பெரிய போராட்டமேற்பட்டு விவசாயமும் தற்கால முறைப்பிரகாரம் நடத்தப்படுவதற் கான முயற்சி கட்டுப்பாடாக நடைபெறவேண்டும். அதாவது மனோபாவம் பொரு ளாதார நிலைமை மாற பெரிய புரட்சி நடக்கவேண்டுமென்பதே அவர் கூறுவதின் சாராம்சம்.

இந்தியாவில் சர்க்கரை அபிவிருத்தி.

கரும்பு, முதலில் ஏற்பட்ட பூமி இந்தியா தான். கரும்பு விவசாய ரீதியில் சாகுபடியாகும் பயிர். சீதோஷ்ண ஸ்திதியைப் பொறுத்தே இப்பயிர் விளைகிறது. இதற்கேற்ற நல்ல சீதோஷ்ண நிலை பம்பாயிலும் சென்னையிலும் காணப்படுகிறது.

லாபம் தரும் தொழிலாக சர்க்கரை செய்வதற்குப் போதிய வசதிகளிருக்கின்றன. கரும்பு பயிராகப் போதிய சீதோஷ்ணமிருப்பதுடன், பயிராகும் கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரை விற்பனையாக ஊரிலேயே நல்ல கிராக்கியிருக்கிறது.

இந்நாட்டில் சர்க்கரைத் தொழில் சர்க்கார் உதவியில்லாமலே நிலைக்கக்கூடும். ஆனால் இவ்விதமேற்பட கொஞ்ச காலமாகும். இப்பொழுது ஆவது ஒன்றுமில்லை. சர்க்கரை செய்யும் இதர தேசங்கள் சாஸ்திர ரீதியாக நன்கு விதையுடன் ஏற்கெனவே இத்தொழிலை நடத்தி வருகின்றமையால் நமக்குச் சில கஷ்டங்கள் பிரத்தியேகமாக அமைந்திருக்கின்றன. ஆகையினால் தான் அந்த தேசச் சர்க்கரைக்கு இந்நாட்டில் இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது.

சர்க்கரைக் கிரயம்.

இந்தியாவில் சர்க்கரைக்கு இறக்குமதி வரி மணங்கிற்கு ரூ. 6-10 7-ஆயிருப்பது இந்நாட்டில் சர்க்கரைத் தொழில் தைரியமாக ஆரம்பிப்பதற்கு சவுகரியமாயிருப்பினும், ஜெர்மனி, இங்கிலாந்திலிருப்பதைவிட இந்த வரி மிகக் குறைவேயெனலாம். நம் நாட்டில் விதிக்கப்படும் காப்பு வரி ஒரு விதத்திலும் அதிகமென்று கூறமுடியாது; இருந்தாலும் இதனால் சர்க்கரைத் தொழில் ஆரம்பிக்கலாமென்ற ஊக்கம் ஊட்டக்கூடியதாயிருக்கிறது. சர்க்கரை செய்யும் கிரயம் மலிவாக யிருக்க வேண்டுமானால் நிறைய கரும்புகளைப் பிழிந்து சாறு எடுக்கும் யந்திரங்கள் அமைவதைப் பொருத்திருக்கிறது, ஒவ்வொரு நாளும் நசுக்கப்படும் கரும்புகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்கரை விலை குறையும். ஆனால் சர்க்கரை கொஞ்சங்கூட நயம் குறையக்கூடாது.

தொழிற்சாலையிற் பருமன்.

தினசரி 12,000 மணங்கு கரும்புகளைப் பிழிந்து சாறாக்கூடிய இயந்திரம் ஸ்தாபிக்கக் கட்டிடம் உள்பட 10 லட்ச ரூபாய் முதல் போட்டால் போதும். இதனால் 1,08,000 மணங்கு சர்க்கரை தயாராவதற்குப் போதிய கரும்புகளை நசுக்கலாம். இதன் விற்பனையினால் போடப்பட்ட முதலுக்கு 100-க்கு 21·27-லிருந்து 47·36-வரையில் சில சமயங்களில் அதிகமாகவும் ஐக்கிம மாகாணத்தில் லாபம் கிடைக்கிறது.

ரஷியாவைப்பற்றி பிரசிடெண்டு ஹூவர்.

ரஷியாவைப்பற்றி ஸோவியத் ரஷியாவின் பொருளாதார வாழ்க்கையென்று பிரசிடெண்டு ஹூவர் (அமெரிக்கத் தலைவர்) திவ்வியமான ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். பொது உடைமை முறை சாத்தியமாகாத விஷயமென்று ரஷியாவை உதாரணமாகக் கூறமுடியாதென்று அதில் எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதைப் படிக்க சுவாரஸ்யமாயிருக்கிறது. ஸோவியத்தினர் இன்னும் 10 வருஷங்களில் அமெரிக்காவிலுள்ள குறைந்த சம்பளம் வாங்கும் ஏழைகளைக் காட்டிலும் நில ஜீவனம் செய்ய வழி ஏற்படுமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

* * * *

சீன தேசத்தில் 10 வருஷ திட்டம்.

சீன தேசத்தில் தொழிலபிவிருத்திக்காக அந்நாட்டு மந்திரிகள் பத்து வருஷ வேலை திட்டமொன்று தயாரித்திருக்கின்றனர்.

"இதுவரை தரிசாகக் கிடக்கும் நிலங்களில் 300 ஏக்ரா விஸ்தீரண பூமியைச் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டுமென்பது அந்த திட்டங்களில் ஒரு ஏற்பாடு. போக்குவரத்து அபிவிருத்தி தேசமெங்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது துறைமுக சீர்திருத்தம் குறைந்தது என்பது லட்சம் டன் பாரம் தூக்கும் வர்த்தகக் கப்பல் செய்வது ஐம்பது லட்சம் குதிரை சக்தியுள்ள விசைக்கருவி (எஞ்சின்கள்) செய்வித்தல் ஆகிய வேலைகளும் இந்த திட்டத்தின் அம்சங்களாகும். இந்த வேலைகளைச் செய்ய தேவையான நிலக்கரி 3 கோடி டன்னிலிருந்து 20 கோடி டன் வரை யெடுக்கவும், இசா தொழிற்சாலைகளின் அவசியத்திற்கும் விசை $17\frac{1}{2}$ லட்சத்திலிருந்து 20 லட்சம் குதிரை சக்தியுள்ள அளவு சிருஷ்டிக்கப்படும். இந்த திட்டத்தை 10 வருஷங்களில் பூர்த்தி செய்வதற்கு வருஷம் 1,120 டாலர்கள் செலவாகுமென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இயந்திரங்களை தயாரித்து அவற்றையொட்டி வேலை செய்வதற்கேற்ற பயிர்ச்சியளிப்பதற்காக நாங்கிங்கில் மாதிரி இஞ்சினீரிங் தொழிற்சாலை யொன்றை வெளியூரார் மேற்பார்வையின் கீழ் நடத்திவர தொழில் இலாகா மந்திரி யோசனை கூறி வருகிறார்."

இவ்விதப் புனருத்தாரண வேலை ஏற்பாடுகளுக்கு சர்வதேச சங்கம் பூரண உதவி புரியவேண்டுமென்று சீன கவர்ன்மெண்டு கேட்டுக்கொண்டதற்கு அச்சங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. சீன தேச பொருளாதார சபைக்கு தகுந்த யோசனை கூற சர்வதேச சங்கத்தின் தொழில் சாஸ்திர நிபுணர் சங்கம் எப்பொழுதும் தயாராயிருக்கிறது.

* * * *

இங்கிலாந்தின் பாங்கி பணம் கடன் கொடுக்கும்.

சீன தேசத்தில் செய்யப்படும் பத்து வருஷ வேலை திட்ட சம்பந்தமாக யோசனை கூறுவதற்காக சென்ற ஆகஸ்டு மாதக் கடைசியில் சர்வதேசச் சங்கக் கமிஷன் அவ்வூருக்குச் சென்றது. அக்கமிஷனில் சர்வதேச சங்க வைத்திய அதிகாரி பொதுக்காரியதரிசியின் பெர்ஸனல் அஸிஸ்டெண்டு, சில கல்வி நிபுணர்கள் முதலியோ

யிருந்தனர். சர்வதேசத் தொழில் காரியாலயத்திலிருந்தும், ஒரு சகாய படையினரும், ஆலைத்தொழில் இன்ஸ்பெக்டர் வேலை விஷயமாக சீன கவர்ன்மெண்டிற்கு உதவி புரிய சீனாவிற்குச் சென்றிருக்கின்றனர்.

* * * *

இந்தியாவில் தொழில் சச்சரவு.

1931-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதியோடு முடிவடைந்த மூன்று மாதங்களில் பிரிட்டிஷ் இந்தியாவில் 52 தொழில் சச்சரவுகள் ஏற்பட்டன. இதனால் பாதிக்கப்பட்டவர் தொகை 103,507. இதன்மூலம் 731,223 நாட்கள் வேலையில்லாமல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

(ஒவ்வொரு தொழிலாளரும் பெறும் தினசரிக் கூலி சராசரி 12 அணா என்று வைத்துக்கொண்டு இவர்கள் ஒவ்வொருவரும் செய்யும் சாமான்களின் மதிப்பு ஒன்று வீதம் கணக்கெடுத்துப் பார்த்தால் பிரிட்டிஷ் இந்தியாவில் அந்த 3 மாதங்களில் 7½ லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது.—(பத்திராதிபர்.)

* * * *

பிரான்ஸில் கோதுமை கிராக்கி.

பிரான்ஸில் கோதுமைக்கு இறக்குமதி விதிக்கப்படுகின்றமையால் உலகத்தில் இதர பாகத்தில் விற்பதைவிட அந்தேசத்தில் கோதுமைசாலை 2½ மடங்கு அதிகமாயிருக்கிறது.

* * * *

யூகா—ஸிலெவியாவில் ரோட்டி கிராக்கி.

ஏற்றுமதி சலுகைச் சங்கம் ஒன்றுதான் உள்ளூரிலிருந்து கோதுமை ஏற்றுமதி செய்யலாமென்று மன்னரால் இடப்பட்ட முதல் கட்டளையை ஒட்டி, உள்ளூர் விற்பனையும் இச்சங்க ஒன்றன் மூலம்தான் நடைபெற வேண்டுமென்றுமென்று மற்றோர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் உள்ளூர் மாவு மில்காரர்கள் கோதுமையை இச்சங்க மூலம் வாங்கவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டிருக்கிறது. வர்த்தக மந்திரி இச்சலுகை சங்கத்துடன் யோசனை செய்து உள்ளூர் விலையை நிர்ணயிக்கிறார். செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஒரு அந்தர் கோதுமை முறையே 240, 250, 260 டைனார்களாக விற்கப்படவேண்டுமென்பது உத்தரவு. இதன் பலனாக ரொட்டியின் விலை நூற்றுக்கு 5 வீதம் உயர்ந்திருக்கிறது.

(இண்டர் நேஷனல் நியூஸ் ஸர்விஸ்.)

* * * *

உலகத்தில் ஆலைகளில் செலவாகும் பருத்தி.

சர்வதேசப் பருத்திச் சங்கத்தார் தயாரித்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து 1931-ம் வருஷம் ஜூலை 31 வரை நடைபெற்ற ஒரு வருஷகாலத்தில் ஆலைகளில் 22,383,000 மூட்டைகள் பருத்தி உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு முந்திய பருவத்தில் செலவான பருத்திமூட்டைகள் 25,209,000. ஜூலை 31-ம் தேதியோடு முடிவான அரை வருஷத்திலேயே பருத்தி உபயோகம் குறைவாயிருந்திருக்கிறது. முந்தின வருஷத்தில் இதே அரை வருஷத்தில் 12,007,000 மூட்டைகள் செலவாயிருக்கையில் பிரஸ்தாப அரை வருஷத்தில் 11,319,000 மூட்

டைகள் தான் எடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லா ஐரோப்பிய தேசங்களிலும் இவ்விதக்குறைவு புலப்பட்டிருக்கிறது. ஜனவரியில் முடிவான அரை வருஷத்தைக் காட்டிலும் பிந்திய அரை வருஷத்தில் அதிகமாகப் பருத்தி உபயோகித்திருக்கும் தேசம் கிரேட பிரிட்டன் ஒன்றுதான். இந்தியா 1930-ம் வருஷத்தில் இதே சமயத்தில் உபயோகித்ததைவிட இவ்வருஷத்தில் கொஞ்சமதிகமாக உபயோகித்திருக்கிறது. ஆசியா கண்டத்தில் அதிக பருத்தி செலவிடும் தேசமாகிய ஜப்பான் 1930-ல் ஜூலை முடிய 6 மாதங்களில் 14,53,000 மூட்டைகள் உபயோகித்திருக்க இவ்வருஷம் ஜூலையோடு 6 மாதங்களில் 13,24,000 மூட்டைகள் உபயோகித்திருக்கின்றன. அமெரிக்காவோ (யுனைட்டட் ஸ்டேட்ஸ்) இன்னும் கொஞ்சம் அதிகமாக உபயோக உபயோகப்படுத்தியிருக்கிறது. இத்தேசம் உபயோகித்துள்ள மூட்டைகள் முறையே 2,792,00.-மும், 27,71,000-மும் ஆகும்.

* * * *

உலகத்திற்கு என்ன அனர்த்தம் விளைந்திருக்கிறது

உலகமெங்கும் பொருளாதார நிலைமை மிக்க கோளாறுகிவிட்டது என்று உலகப் பிரசித்திவாய்ந்த அர்த்த சாஸ்திரி ஸர் வால்டர் லாடன் கூறுகிறார். மகாயுத்த காலத்தில் ஏற்பட்ட நிலைமை எவ்வாறு ஒருபொழுதும் நேர்ந்திராதவாறு இருந்ததோ அவ்விதமே, யுத்தத்திற்கப்பால் தோன்றியுள்ள இப்பொழுது காணப்படும் சுணக்கமும் இதுவரையில் காணப்படாதவாறு பெரிய நெருக்கடியை உண்டுபண்ணியிருப்பதாக அவர் கூறியிருக்கிறார். பின்வரும் விஷயங்கள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது :—

1. யுத்தக்கடன்கள் நஷ்டஈடு விஷயம்.
2. தங்க நிலைமை.
3. அதிக கஷ்டதிசையிலிருக்கும் தேசங்களுக்கு கடன் கொடுத்துதவுவது.
4. விற்பனையாகாத சாமான்களை நிரப்பிக் கடைகளில் வியாபாரம் ஆகாமல் தடைப்படும் விஷயம்.
5. சர்வதேச வர்த்தகத்திற்குத் தடையாயிருக்கும் இடைஞ்சல்கள்.

* * * *

விவசாயத்திற் குபகாரமாக பாங்கிகள் செய்யக்கூடிய வேலை.

"மார்க்கெட்டில் நல்ல சரக்குகளுக்கேற்ற விலை கிடைக்காமல் செய்யும் உபயோகமற்ற சரக்குகளை கப்பலில் ஏராளமாக ஏற்றுமதி செய்வதைத் தடுப்பதற்கான வழியில் சாமான்களை ஒரே ரகமாகவும், தரமாகவும் பாகுபடுத்தும் வேலையில் பாங்கிகள் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டால் லாபகரமாகவிருக்கும். கூட்டுறவு விற்பனைக்குச் சாதகமான நிலைமை ஏற்பட்டால் இதை நன்கு நடத்த பாங்கிகள் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கலாம். விவசாயிகள் லாபம் தராத பயிர்களைப் பயிரிடுவதைத் தடுக்கும், குடியானவர்கள் தங்கள் பயிர்முளைத்து வருமுன் விற்பதாக ஒப்பந்தம் செய்துகொள்ளுமுன் தகுந்த யோஜனையும் கூறக்கூடும்".

* * * *

800 ராத்தல் எடையுள்ள எருதைத் தூக்குபவர்.

டென்னஸியிலுள்ள மிஸ்டர் எச். இ. மான் என்பவர் தம்முடைய தினசரி தேகப்பயிற்சி நிமித்தம் 800 ராத்தல் எடையுள்ள ஒரு எருதை கொஞ்சதூரம் தூக்கிச் செல்லுகிறாராம்.

அதிகாரத்தைச் செலுத்த இஷ்டப்படாதது குற்றமாகாது.

மதுரை ஜில்லாவில் ஒரு பஞ்சாயத்து கிராமத்தில் ஒருவர் பஞ்சாயத்து நிலத்தில் ஆக்ரமித்து விட்டார். அந்த ஆக்ரமிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஜில்லா போர்டு தலைவர், பஞ்சாயத்து போர்டு தலைவரைக் கேட்டுக் கொண்டார். பஞ்சாயத்து தலைவர் அவ்விதம் செய்ய மறுத்துவிட்டார். அதன் பேரில் ஜில்லா போர்டு தலைவர், யூனியன் போர்டுக்குள்ள அதிகாரத்தைத் தாமே செலுத்த உத்தேசித்து அச்சட்டத்தின் 42-B பிரிவின் கீழ் ஆக்ரமித்தவருக்கு நோட்டீஸ் கொடுத்தார். நோட்டீஸ் பெற்றவர் அந்த நோட்டீஸை லக்ஷியம் செய்யாமற்போகவே, ஜில்லா போர்டு தலைவர் அவர்மீது நடவடிக்கை யெடுக்கலானார். வழக்கை விசாரித்த சப் மாஜிஸ்திரேட்டு ஜில்லா போர்டு தலைவருக்கு இத்தகைய நடவடிக்கை யெடுக்க அதிகாரமில்லையென்று வழக்கைத் தள்ளிவிட்டார். உடனே ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு கொடுக்கப்பட்டது. ஹைகோர்ட்டில் கீழ் கோர்ட்டு தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டதுடன் நீதிபதி பின் வருமாறும் எழுதியிருக்கிறார். ஸ்தல ஸ்தாபனச் சட்டம் 42-B பிரிவின் கீழ் நடவடிக்கை யெடுப்பதற்கு ஜில்லா போர்டு தலைவருக்கு அதிகாரமேயில்லை. ஆக்ரமிப்புகளைத் தடுக்க நோட்டீஸ் பிறப்பிக்கும் அதிகாரம் அந்தந்த ஸ்தல போர்டு தலைவர்களுக்கே உரியது. இந்த அதிகாரத்தைச் செலுத்துவது இஷ்டத்தைப் பொறுத்தது. இதில் நிர்ப்பந்தமென்பதில்லை. சட்டப் பிரகாரம் செய்யவேண்டுமென்று இஷ்டத்தைப் பொறுத்த அதிகாரத்தைச் செலுத்தாதது குற்றமாகமாட்டாது. இந்த வழக்கில் ஜில்லா போர்டு தலைவர் தாம் நடவடிக்கை யெடுக்குமுன் வந்த நிலம் பஞ்சாயத்தைச் சேர்ந்தது என்று தெரிவிக்காம லிருந்திருக்கிறார். ஜில்லா போர்டுக்குச் சொந்தமில்லாத ரோடு சம்பந்தமாக ஸ்தல ஸ்தாபன சட்டம் 159-வது பிரிவின்கீழ் நோட்டீஸ் பிறப்பிக்கவோ அந்த நோட்டீஸ் பிரகாரம் நடக்கத் தவறினால் நடவடிக்கை யெடுக்கவோ ஜில்லா போர்டு தலைவருக்கு ஒருவித அதிகாரமும் கிடையாதென்பது அத்தீர்ப்பின் சாரம்.

ரோடு அபிவிருத்தி.

நல்ல ரஸ்தாக்களின் அவசியம்.

இந்திய விவசாயக் கமிஷன் ரிப்போர்ட்டில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "சாமான்களுக்கு கிராக்கியுள்ள இடங்களுக்குச் சுலபமாகவும், சீக்கிரமாகவும், மலிவாகவும் எடுத்துச் செல்ல நல்ல வண்டித்தட அவசியமாகிறது. அந்தந்த இடங்களில் மார்க்கெட்டு வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். இவ்விதம் செய்தால் நாடெங்கும் சாமான்களுக்கு ஒரே மாதிரியாக விலை கிடைக்கும். இந்த ஏற்பாடுகள் விவசாயிகளுக்கு லாபகரமாகவிருக்கும். சாமான் விளையுமிடத்திலிருந்து விற்கப்படவேண்டிய இடத்திற்குப் போக சரியான ரஸ்தாவில்லாவிடில் சாமான் விற்கப்படும் விலை யதிகரிக்கிறது. இந்த அதிகப்படியான செலவு சாதாரணமாக விவசாயிகள் தலையில்தான் விழுகிறது. இதை ஒரு உதாரணத்தைக் கொண்டு கவனிப்போம். நல்ல ரோட்டோரத்திலிருக்கும் கிராமத்தில் நெல்

என்றைக்கும் ஒரு கண்டி ரூபாய் 4-லிருந்து ரூபாய் 6 வரை விலை போகும். ஆனால் ரோட்டைவிட்டு வெகுதூரம் உள்ளே ஒதுக்குப்புறமாயுள்ள கிராமத்தில் மேற் சொல்லப்பட்ட மாதிரி நெல் ஆயிரம் கண்டி யிருப்பின் அரைக்கட்டை வண்டி மூலம் விற்கப்படும் இடம் போய் சேரவேண்டியிருப்பதனால் இதன் விலை 5,000 ரூபாய் குறைவென்றே கணக்கிடப்படவேண்டும். இதே வண்ணமே அந்த கிரா மத்திற்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டுவருவதற்கும் ஆயிரக்கணக் காக ரூபாய் செலவிடவேண்டியிருக்கிறது இதிலிருந்து நல்ல ரோடுகளில்லா விடில் ரயத்துகளுக்கு நஷ்டம் ஏராளமாக ஏற்படுகிறதென்பதை தெரிந்துகொள்ள லாம். ரயத்துதான் பயிரிட்டு பொருள் சேகரிப்பவன்; அவன்தான் ஆகாரம்போடு கிறவன்; அவன்தான் தேசத்திற்குற்றதோர் உயிர். நல்ல ரோடில்லாததனால் கஷ் டப்படுபவனும் அவனே; அவன்தான் இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியவ னுமாகும். அவன் செலவிடும் பணம் எங்கே போகிறது ? மத்தியில் இவன் சரகதை வாங்கிவிற்பவன்: லாபம் சம்பாதிக்கும் வியாபாரி; சுகஜீவியாகவிருக்க ஆவல்கொண் டுள்ள பட்டிணவாசிகள் ஆகியோர்கள் அவன் சிரமத்தால் ஆதாயமடைகிறார்கள். பொருள் உற்பத்தி செய்பவனாகிய ரயத்துகளுக்கு ஆகையினால் ரோடு எவ்வளவு அத்தியாவசியமானதென்பதை இதிலிருந்து உணரக்கூடும்.

ரோடுகளின் அவசியம் எவ்வளவென்பதைத் தெரிந்துகொண்டபிறகு, இந்தியா வில் ரோடுகள் எந்த ரீதியிலிருக்கின்றன வென்பதையும் உலகத்தில் இதர தேசங்க ளுடன் ஒத்துப்பார்த்தால் நாம் என்ன ஸ்திதியிலிருக்கிறோம் என்பதையும் கவனிப் போம். ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது ஆயிரம் கிராமங்களிருக்கின்றன. ஒரு சதுரமைல விஸ்தீரணத்திற்கு ஒரு மைல் ரஸ்தா தேவையென்று வைத்துக் கொண்டாலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்த பக்ஷம் 5,000 மைல் நீளம் ரோடி ருக்கவேண்டும். ஆனால் உள்ளபடி இதில் ஐந்தில் ஒருபாகம் ரோடுகூட சரியாக வில்லை. இந்த ரோடுகளும் பெரும்பாலும் பட்டிண ரஸ்தாக்களாகவே இருக்கின் றன.

அமெரிக்கா கண்டத்தில் விவசாயம் நன்றாக அபிவிருத்தியடைந்துள்ள பிர தேசங்களில் ரோடுகள் கணக்கு பின்வருமாறிருக்கிறது. இல்லினாய், ஐயோவா, மிஸௌரி முதலிய ஜில்லாக்களில் 1 சதுரமைல் விஸ்தீரணத்திற்குள் முறையே 1·72, 1·87, 1·62 மைல்கள் நீளம் ரோடுகளிருக்கின்றன. இண்டியானாவில் 2·12 மைல் நீளம். மலைப்பாறை நிறைந்த கொலராடோவில் 0·6 மைல். 1 பிரான் ஸில் 2·1 மைல் நீளம் ரஸ்தாக்கள் ஒரு சதுர மைலுக்குக் கணக்காகிறது. தொழிற் சாலைகளிருக்கும் பிரதேசங்களில் சதுர மைல் எல்லையில் சராசரி 2·3 மைல் ரோடி ருப்பதை இங்கு நான் ஒத்துப்பார்க்க விரும்பவில்லை. ஐரோப்பா கண்டம், யுனை டெட்ஸ்டேட்ஸ் முதலிய நாடுகளில் விவசாயம் நன்றாக வளர்ந்துள்ள பிரதேசங் களில் ஒரு சதுர மைலுக்கு 1·7 மைல் வீதம் நல்ல பாட்டைகளிருக்கின்றன. மலைப்பிரதேசத்தில் 0·7 மைல் நீளமும், பாலைவனங்களில் 0·3 மைல் நீளமும் ரோடுகளிருக்கின்றன. ஆனால் சென்னை மாகாணத்திலோ ஒரு சதுர மைலுக்கு 2 மைல் (சுமார் $1\frac{1}{2}$ பர்லாங்கு) நீளம்தான் ரோடு போடப்பட்டிருக்கிறது. இதர தேசங்களில் பாலைவனங்களிலுள்ள ரோடு கணக்கிற்கும் இது குறைவாகவிருக் கிறது.

ரோடு அபிவிருத்தி

முற்போக்கடைந்திருக்கும் இதர தேசங்களில் பாலைவனங்களை விடக் கொஞ்சம் மேலாகவிருப்பதற்காகவேனும் நம் நாட்டில் ரோடு வேலைகளை குறைந்தது இரட்டித்ததாக வேண்டியது அவசியம். இந்த லக்ஷியம் கைகூடுவது எங்ஙனம்? கப்பி ரஸ்தா போடுவதற்கு மைலுக்குச் சராசரி ரூ. 11,000 ஆகிறது. இதில் ஒரு சின்னப் பாலம் கட்டுவதானால் ரூ. 2,000 ஆகும்; பெரியபாலம் கட்டுவதானால் மேலும் ஒரு ஆயிரம் கூடவாகும்; ரோடுநீளத்தை இரட்டிப்பதானால் ஜில்லா ஒன்றுக்கு ரூ. 1 4 கோடிவீதம் செலவாகும். இதை எண்ணுமிடத்து நம் லக்ஷியம் சாத்யமாகுமென்று எண்ண இடமில்லை; ஒன்று இந்த ஆசையை விட்டுவிடவேண்டும்; இல்லையேல் ஆரம்பித்தோம் என்று பேர்படுத்த மண் தடத்தைக்கொண்டு மட்டத்தரமான ரோடுகளைப்போட நாம் இசையவேண்டும். மண் தடமென்றால் வதியும் சப்பாத்தியும் மேடுபள்ளமும் நிறைந்த ரோடென்று அர்த்தமில்லை. அகப்படும் சரளைகளைக்கொண்டு நடுவில் மேடாகவும், இரண்டு பக்கங்களிலும் சரிவிட்டுத் தண்ணீர் தேங்காமல் ஓட வழிவிட்டு ஓரங்களில் செடிகளை வைத்து சரியாக சீர் பார்த்து வைத்துக்கொள்ளப்படவேண்டிய ரோடென்றே அர்த்தம். இவ்விதரோடு செப்பனிட மைலுக்கு ரூ. 1,500 பிடிக்கும். சின்னப் பாலமாயிருந்தால் ரூ. 2,000 மும், பெரியதாயிருந்தால் ரூ. 3,000 மும் இந்தச்செலவுடன் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். மொத்தம் மைல் மண் தடம் ரூ. 4,500 ஆக ஒரு ஜில்லாவிற்கு ரூ. 45 லட்சம் செலவேற்படும். வருஷம் 3 லட்சம் ரூபாய் வீதம் செலவிட்டால் மொத்தம் 15 வருஷங்களில் ரோடு நீளம் இரட்டித்துவிட வழி ஏற்படக் கூடும். 3 லட்சம் இதற்குச் செலவிடுவது அசாத்தியமென்று எந்த ஜில்லாவிலுமிருக்காது. மேற்கூறப்பட்டவண்ணம், தடம் போடுவது முடியாத காரியமென்றும் சொல்வதற்கில்லை: இந்த ரோடுகளை சரியாகக் கவனித்துச் செப்பனிட்டுவர வருஷம் மைலுக்கு ரூ. 100 செலவாகும். மழை காலத்தில்தான் கொஞ்சம் சிரமமாயிருக்கும். இந்த பராமரிப்பு வேலை பூராவையும் கிராமப் பஞ்சாயத்தாரிடம் விட்டுவிடலாம். ஒரு கிராமத்தில் இத்தகையத் தடம் சுமார் 2 மைல்தான் இருக்குமாகையால் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்தை ஏற்படுத்தி வருஷம் ரூ. 200 செலவிட வழி ஏற்படுத்தவேண்டும்.

இந்தச் செலவிற்குப் பணத்திற்கு எங்கே போகிறது. வரி உயர்வென்ற பேச்சே இச்சமயம் கூடாது. ஆனால் எவ்விதமாகத் தான் செலவை நடத்துவது? ராஜ பாட்டைகளின் செலவும் பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து எடுபட்டுவிட்டால் ஒவ்வொரு ஜில்லாவிலும் சராசரி லட்சம் ரூபாய் வரை மீரும்; சமீபத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் கிராம அபிவிருத்திநிதியிலிருந்தும் ஒரு லட்சம் கிடைக்கக்கூடும்; மாகாண கவர்ன்மெண்டு வரியிலிருந்து பாலம் கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் தொகை ஒரு லட்சம் ஆக மொத்தம் 3 லட்சம் சேர்ந்துவிடுகிறது. அதைக்கொண்டு நல்ல வண்டித் தடம் போட்டால் ஏற்படக்கூடிய லாபம் வியாபாரப் பெருக்கினால் மாகாணத்தின் வரி வருமானம் தாராளப் பெருக்ககூடும். தேசம் செழிப்புற்று பண வருமானம் அதிகப்பட்டால், பிறகு பாக்கியுள்ள 1000 மைல்களுக்கும் நல்ல ஜெல்லிபோட்டு கட்டுவதை யோசிக்கலாம் என்பது எமது திடமான நம்பிக்கை.

தென் ஆற்காடு ஜில்லா, கள்ளக்குரிச்சி தாலுக்கா, பாக்கம் பஞ்சாயத்து பிரசிடெண்டு வெ. அப்பாவு நாயுடு தெரிவிப்பதாவது :—

இந்த ஜில்லா பஞ்சாயத்து போர்ட்டுகளுக்கு ம-ா-ா-ஸ்ரீ லோக்கல் போர்டா ரிடம் இருந்து வரும் சர்க்குலர்கள் இங்கிலிஷில் வருவதால், அதை பஞ்சாயத்து தார்கள் இன்னதென்று தெரிந்துகொள்வதக்கு காலதாமசங்கள் ஏற்படுகிறது. காலத்தில் நடக்கவேண்டிய வேலைகள் நடைபெறுமல் போகிறது. ம-ா-ா-ஸ்ரீ கோபால்ஸாமி அய்யங்கார் ரெஜிஸ்திரார் ஜெனரலாக இருந்த காலத்தில் சர்க்கு லர்கள் எல்லாம் தமிழில் மொழிபெயர்த்து அனுப்பினர். அப்போது பஞ்சாயத்து தார்கள் தெரிந்து அதன்படி பஞ்சாயத்துகளை நன்கு நடத்தி வந்தனர்கள்.

இக்காரணத்தை:—இனிமேல் பஞ்சாயத்து போர்ட்டுகளுக்கு வரும் சர்க்குலர் களை தமிழில் மொழி பியர்த்து அனுப்பினல் நலம் என்றும் கண்தெரியாதவன்-கண் தெரிந்து நடக்கும் கருவியாகுமென்றும் எனக்கு தோன்றுகிறது.

பாக்கம்,
9—10—'31.

வெ. அப்பாவு நாயுடு,
பிரசிடெண்டு.

கேரள சந்தனச் சோப்பை வாங்குங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிலும் சுகத்தையும் ஆனந்தத்தையும் அளிக்கும் சோப்பு இதுவே.

மிகவும் சிறந்த நறுமணம் பொருந்தியது

கோடையில் மிகுந்த குளிர்ச்சியையும், பரிமளத்தையும் கொடுக்கும்

வெகு சிறந்த சோப்பும் இதுவே.

கேரளச் சோப்பு இன்ஸ்டிடியூட்,
கள்ளிக்கோட்டை.

அடக்கம்.

பக்கம்.

1. மிருக வைத்திய இலாகா யாதாஸ்து 41
2. பத்திராதிபரின் குறிப்புகள் 44
3. லோகல் போர்டுகள் குத்தகை விஷயம் 46
4. கதம்பம் 51
5. ஸ்தல ஸ்தாபன அனுபவங்கள் 52

சந்தா விவரம்.

பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு	ரூபாய்	2.
மற்றவர்களுக்கு ...	"	3.
தனிப்பிரதி ...	அணா	4.

18DEC 1

விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்,

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

பொது விளம்பரம்.

தாலூக்கா போர்டுத்தலைவர்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து, கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிருபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சமிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு எதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிருபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிருபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.